
### சந்திரயான்-3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேலுக்கு

# முதல்வர் மு.க. ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து!



சென்னை,ஆக.25-

சந்திரயான் 3 விண்கலம் நிலவின் தென் துருவத்தில் தரையிறக்கப்பட்ட சாதனையை யடுத்து, அதன் திட்ட இயக்குநர் விழுப்புரத்தைச் சேர்ந்த வீரமுத்துவேல் அவர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த முதல்வர் அவர்களின் உரையாடல் வருமாறு:-

**முதல்வர் மு.க. ஸ்டாலின் :** வாழ்த்துகள்.. வாழ்த்துகள்.. சந்திரயான் விண்கலம் வெற்றி பெற்றது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே உலக அளவில் பெருமை தேடிக்கொடுத்திருக்கிறீர்கள்.

**திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் :** ரொம்ப சந்தோஷம் சார்.. ரொம்ப சந்தோஷம்...

**முதல்வர் :** அப்புறம் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள உங்கள் அப்பாவின் பேட்டியை பார்த்தேன். அவர் ரொம்பவும் பெருமைப்பட்டுள்ளார். நீங்கள் தமிழ்நாட்டுக்கு வரும் போது எனக்கு தகவல் மட்டும் சொல்லுங்கள். நான் உங்களைச் சந்திக்கிறேன்.

**வீரமுத்துவேல் :** எஸ் சார். ரொம்ப சந்தோஷம் சார்...

**முதல்வர் :** கட்டாயம் சந்திக்கிறேன். வாழ்த்துகள். எல்லோருக்கும் வாழ்த்துக்களை சொல்லுங்க..

**வீரமுத்துவேல் :** ரொம்ப சந்தோஷம் சார். வாழ்த்துகளை எல்லோருக்கும் சொல்கிறேன் சார். நீங்க கால் பண்ணினதுக்கு ரொம்ப சந்தோஷம் சார். உங்களோட சர்வீஸ் எல்லாம் எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு சார். ரொம்ப சந்தோஷம் சார்.

**முதல்வர் :** ரைட்...ரைட்...

**வீரமுத்துவேல் :** ரொம்ப சந்தோஷம் சார். நீங்கள் எனக்கு போன் பண்ணினதே ரொம்ப சந்தோஷம் சார்.

**முதல்வர் :** பெரிய சாதனை... பெரிய சாதனை...

**வீரமுத்துவேல் :** சார் இப்ப ரோவர் வந்து வெளியில இருக்கு. சந்திரயானோட ரோவர். அதனால நான் எதுவும் பேச முடியவில்லை. ஏன்னா லாஸ்ட் பியூ மினிட்ஸா நான் ஆபரேஷன்ஸ்ல இருந்ததால எனக்கு முக்கியமான வேலை இருந்துச்சு. எனக்கு ரொம்ப சந்தோஷம் சார், உங்கள் கிட்டே பேசினதுக்கு.

**முதல்வர் :** நல்லது.. நல்லது..

**வீரமுத்துவேல் :** தேங்க் யூ சோ மச் சார். தேங்க் யூ சோ மச்..

**முதல்வர் :** தமிழ்நாட்டுக்கு வரும்போது சொல்லுங்க.. உங்கள நான் மீட் பண்ணுகிறேன்.

**வீரமுத்துவேல் :** ரொம்ப சந்தோஷம் சார்...

**முதல்வர் :** வணக்கம்.

### 1824-ல் வள்ளலார்! 1924-ல் வைக்கம் போராட்டம்! 2024-ல்

# இந்தியா நமக்கானது என்பதை உருவாக்குவோம்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. உரை!

வள்ளலார் நாத்திகர் என்று நிரூபித்தால் ஒரு கோடி ரூபாய் தருவதாக அர்ஜுன் சம்பத் சவால் விட்டிருக்கிறார். நான் பதில் தருகிறேன். பெரியார் வேதங்களை மறுக்கிறார். எனவே அவரை நாம் நாத்திகர் என்று குறிப்பிடுகிறோம். அதுபோலவே வள்ளலாரும் வேதங்களை மறுக்கிறார்; அதனால் நாம் அவரை நாத்திகர் என்று குறிப்பிடுகிறோம்.

எனவே அர்ஜுன் சம்பத் அவர்கள் சவால்விட்ட தொகை ஒரு கோடி ரூபாயை விழா குழுவிற்கு உடனடியாக வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் வேத ஆகமங்களை மறுத்ததோடு மட்டுமல்லாமல் சாகும் வரை நாத்திகராகவே வாழ்ந்து காட்டினார். அவர் வழிவந்த கலைஞரும் சமூகநீதிக் கோட்பாடுகளை தூக்கிப்பிடித்தார். அருந்ததியினர் மக்களுக்கு மூன்று சதவிகிதம் உள் இட ஒதுக்கீடு வழங்கியது உட்பட சமூக நீதியை பாதுகாப்பதற்கான ஏற்பாடாகும்.

பெரியார் பார்ப்பனர்களை, 'பிராமணியம்' என்ற குறிப்பிட்ட சொல்லாடல் மூலம் சமூக வெறுப்பை வளர்க்கவே பயன்படுத்தியதாக கூறுகின்றனர். அது சரியல்ல; யாரெல்லாம் பிராமணியக் கோட்பாடுகளை கடைப்பிடிக்கிறார்களோ, அவர்களை மட்டுமே அச்சொல் சுட்டிக் காட்டுகிறது. சமத்துவத்திற்கு எதிராக, சகோதர தத்துவத்திற்கு எதிராக, சுதந்திரத்திற்கு எதிராக யாரெல்லாம் செயல்படுகிறார்களோ அவர்கள் 'பிராமணியம்' என்ற கோட்பாட்டை கடைப்பிடிக்கிறார்கள். எனவே நாம் அவர்களை எதிர்க்க வேண்டிய நிலை உருவாகிறது. பார்க்கக் கூடாத சமூகம், நெருங்கக் கூடாத சமூகம், தொடக் கூடாத சமூகம் என்று ஏற்றத் தாழ்வுள்ள பாகுபாடுகளை உருவாக்கி மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியில் சனாதன அதர்மம் கடைப்பிடிக்கப்பட்டதால் அதை பெரியார் கடுமையாக எதிர்த்தார், விமர்சித்தார். சூரியன் உதயமாவதற்கு முன்னும், சூரியன் மறைந்த பின்னும் தங்களுடைய தேவைகளை முடித்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு சமூகத்தையே ஒதுக்கி பகலில் நடமாட விடக் கூடாது என்று தீண்டாமையை கடைப்பிடித்ததாலே பெரியார் அக்கொடுமைகளைக் கண்டு எதிர்த்தார்.

நான் ஒரு சனாதனி என்று 1920வாக்கில் தன்னை அறிவித்துக் கொண்டவர் காந்தி. பெரியார் என்ற மகத்தான தலைவரைச் சந்தித்த பின்புதான் அக்கோட்பாடுகளில் இருந்து காந்தி பின் வாங்கினார். வைக்கத்தில் நடைபெற்ற போராட்டம் வெற்றி பெற்றதை அடுத்து போராட்டத்தின் வெற்றி புகழ் பெரியாருக்கு சென்று விடக் கூடாது என்று ராஜாஜி கருதினார். அதற்கான சூழ்ச்சிகரமான வேலைகளையும் அவர் செய்தார். அதற்கு அவர் காந்தியை பயன்படுத்தினார். பெரியார் பெருந்தன்மையோடு சொன்னார், "போராட்டத்தின் வெற்றியின் புகழ் யாருக்கு வேண்டுமானாலும் செல்லட்டும். வைக்கம் வீதிகளில் அனைத்து தரப்பினரும் சென்று வருவார்களானால் அதுவே எனக்கு கிடைத்த மிகப் பெரும் வெற்றி" என்று. பெரியார் வைக்கம் போராட்டத் திற்கு சென்ற போது ராஜாஜி, "நம் தேசத்தில் பல பிரச்சினைகள் இருக்கும் போது நீங்கள் ஏன் பிற தேசத்திற்கு சென்று போராட வேண்டும்" என்று கேள்வி எழுப்பினார். அதற்கு பெரியார் கூறினார்: "எந்த தேசம் அடிமைப்பட்டுக் கிடக்கிறதோ, எங்கு மக்கள் அடக்குமுறையின் கீழ் அடிமைப்பட்டு கிடக்கிறார்களோ அவர்களுக்காக நான் போராடுவேன், எனக்கு நம் தேசம், பிறதேசம் என்று பாகுபாடெல்லாம் கிடையாது". கியூபப் புரட்சியாளர் சேகுவேராவைப் போல இப்படி முழங்கினார் பெரியார்.

வைக்கம் போராட்டத்தில் பெரியார் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்ததை அவரது இணையர் நாகம்மையிடம் கேட்டபோது, என் கணவர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் இதுபோன்று இன்னும் பல போராட்டங்களை கையில் எடுக்க வேண்டும், அவருக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இன்னும் கூடுதலான தண்டனைகள் கொடுத்தாலும் அதை அவர் எதிர்கொள்வார்; அந்த பாக்கியத்தை எங்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று உணர்ச்சி பொங்கக்கூறினார். 1824 இல் வள்ளலார் தோன்றி சனாதனத்திற்கு எதிராகக் குரல்கொடுத்தார். 1924 இல் வைக்கம் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான போராட்டத்தை பெரியார் முன்னெடுத்து வெற்றி கண்டார். 2024 இல் நமக்கான போராட்டத்தை நாம் முன்னெடுத்து இந்தியா நமக் கானது என்பதை உருவாக்க வேண்டும்.

திருச்சியில் ஆகஸ்ட் 19 அன்று தமுஎகச நடத்திய "வள்ளலார் 200; வைக்கம் 100" கலைவிழாவில் ஆற்றிய உரையிலிருந்து...

**நன்றி :**
**தீக்கதிர்**
**23.8.2023**



தமிழ்நாடு அரசின் 'தகைசால் தமிழர்' விருது பெற்ற திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களை மேனாள் ஒன்றிய அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா அவர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்து பொன்னாடை அணிவித்தார்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு

# ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.6366 கோடி நிலுவை!

### காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.25-

கோடிக்கணக்கான மக்கள் பயன்பெறும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில், ஆறாயிரத்து 366 கோடி ரூபாயை ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்காமல், பாக்கி வைத்துள்ளதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்ட சமூக வலைதள பதிவில், கடந்த 2005 ஆம் ஆண்டு இதே நாளில், கோடிக்கணக்கான மக்களின் வேலை உரிமைத் திட்டமாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை காங்கிரஸ் அரசு கொண்டுவந்ததை நினைவு கூர்ந்துள்ளார்.

மோடி ஆட்சியில் இத்திட்டத்திற்கான நிதி 33 சதவிகிதம் குறைக்கப்பட்டதுடன், 18 மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய ஆறாயிரத்து 366 கோடி நிதியை வழங்காமல் பாக்கி வைத்துள்ளதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத போக்கு தொடர்ந்தாலும், இத்திட்டத்தில் தற்போது பணியாற்றும் 14 கோடியே 42 லட்சம் மக்களுக்கு ஆதரவாக காங்கிரஸ் துணை நிற்கும் என்று மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பயனடைபவர்களில், பாதிக்கும் மேற்பட்டோர் பெண்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு காலத்தில், கோடிக்கணக்கான மக்களை, ஊரக வேலை வாய்ப்பு திட்டம் பாதுகாத்ததாக மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் தலைமையில்

# வனப்பாதுகாப்பு - வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம்!

### கிண்டி தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது!

சென்னை, ஆக. 25-

வனத்துறை அமைச்சர் டாக்டர். மா. மதிவேந்தன் தலைமையில் வனப்பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தான ஆய்வுக்கூட்டம் கிண்டி முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வனத்துறை அமைச்சர் டாக்டர். மா. மதிவேந்தன் தலைமையில் வனப்பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தான ஆய்வுக்கூட்டம் கிண்டி முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் முன்னிலையில் துறை ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வனத் துறை அமைச்சர் அவர்களிடம் வனத்துறையின் உயர் அலுவலர்கள் தங்களது துறையில் வனப்பாதுகாப்பிற்காக செயல்படுத்தப் பட்ட திட்டங்கள் குறித்தான முன்னேற்ற அறிக்கையின் விபரத்தினை விளக்கிக் கூறினார்கள். அதனைக் கேட்டறிந்த அமைச்சர் அவர்கள் துறையிலுள்ள அலுவலர்கள் அனைவரும் முதல்வரின் முகவரி சார்ந்த மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி விரைவில் தீர்வு காண தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், மானியக் கோரிக்கை அறிவிப்புகளுக்கு முன்னுரிமை அளித்து அதற்கான பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் எனவும் வனத் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், நமது துறை சார்ந்த வளர்ச்சித்திட்டங்கள் அனைத்தும் தொய்வின்றி செயல்பட அனைத்து நிலை அலுவலர்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சுப்ரத் முஹபத்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ரா. ரெட்டி மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் / தலைமைச் செயல் அலுவலர் (கேம்பா) சுதா நாஹீ குப்தா, மற்றும் வனத் துறை உயர் அதிகாரிகள், தமிழகத்தில் உள்ள அனைத்து மண்டல வனப் பாதுகாவலர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைக்கிணங்க, கடலூர், மஞ்சக்குப்பம், வரதம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இலவச கண் சிகிச்சை முகாம் டாக்டர் பிரவீன் ஐய்யப்பன் தலைமையில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐய்யப்பன் 100 பேருக்கு ரூ. 1 லட்சம் மதிப்பில் கண் கண்ணாடிகளை வழங்கினார். அதில் 10 பேருக்கு கண் புரை அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. விழாவில் முன்னாள் மாவட்டப் பொருளாளர் குணசேகரன், மாநகராட்சி கவுன்சிலர்கள் கீதா குணசேகரன், பிரகாஷ், சரத் தினகரன், தமிழரசன், சுமதி ரங்கநாதன், மகேஸ்வரி விஜயன், ராதிகா பிரேம்குமார், கீர்த்தனா ஆறுமுகம், பாரூக் அலி, கர்ணன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், முன்னாள் ஊராட்சித் தலைவர் சுதாகர் மற்றும் பலர் பங்கேற்றனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவக்குருநாதன், ராஜகுரு, சக்திவேல், முருகன், அமுதா ஆகியோர் செய்திருந்தனர்.

